# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | சிவகங்கை | காலம் : | 23/07/2022 | முதல் | 27/07/2022 |
| அறிக்கை எண் : | 058/ 2022 | வெளியீட்டு நாள் : | 22/07/2022 | | |

## சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 36° - 38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24° - 26° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (19.07.2022 முதல் 21.07.2022) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 27-07-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 19/07 | 20/07 | 21/07 | | தேதி | நாள்-1 23/07 | நாள்-2 24/07 | நாள்-3 25/07 | நாள்-4 26/07 | நாள்-5 27/07 |
| 5.0 | 15.2 | 0.0 | | மழை (மி.மீ) | 10 | 3 | 2 | 8 | 10 |
| 36 | 38 | 37 | | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 35 | 37 | 37 | 36 | 35 |
| 24 | 24 | 26 | | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 24 | 25 | 25 | 24 | 24 |
| 5 | 5 | 6 | | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 7 | 7 | 7 | 7 |
| 58 | 79 | 79 | | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 60 | 60 | 60 | 60 | 60 |
| 52 | 48 | 73 | | | 40 | 40 | 40 | 40 | 40 |
| 8 | 4 | 12 | | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 9 | 9 | 8 | 8 | 8 |
| வட மேற்கு | தென் கிழக்கு | தெற்கு | | **காற்றின் திசை** | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

**குறுஞ்செய்தி :**

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை 23, 26, 27 தேதிகளில் மிதமான மழையும், 24, 25 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 35° - 37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 24°-25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 9 கி.மீ வேகத்தில், மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

**கனமழை எச்சரிக்கை:**

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை 23, 26, 27ம் தேதி கனமழை பெய்ய வாய்ப்பு. விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக்குட்டைகள் மற்றும் நீர்நிலைகளை சரிசெய்து மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும். இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சிமருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்தி வைக்கும்படியும், விளைநிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும், கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமலும்,

மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்

இடி மின்னல் எச்சரிக்கை:

வரும் 23.07.2022 முதல் 27.07.2022 தேதிகளில் தமிழகத்தின் ஒரு சில இடங்களில் இடி மின்னலுக்கான வாய்ப்பு உள்ளது. வயல்களில் ஆடுகளை கிடை அமர்த்துதல் மற்றும் மேய்ச்சலின் போது போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். இந்த காலகட்டத்தில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியே அனுப்பாமல், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

தோட்டக்கலை பயிர்களான மிளகாய், கத்தரி ,புடலங்காய் ,வாழை மற்றும் பல வருட பயிர்களை தேர்வு செய்து ஆடிப்பட்டம் விதைப்பு மற்றும் நடவு செய்து விவசாயிகள் பயன் அடையுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்** : நெல், தென்னை.

நெல்:

- குறுவை பருவத்தில் நடவு செய்யபட்ட நெல் தூர், கதிர் பிடிக்கும் பருவத்தில் தண்டு துளைப்பான் கட்டுப்படுத்த ஒரு ஹெக்டருக்கு ஒரு லிட்டர் அசாடிராக்டின் 3.03% தெளிக்க வேண்டும்.

தென்னை:

- தென்னை பயிரைத் தாக்கும் தஞ்சாவூர் வாடல் நோய் கட்டுப்படுத்த மரம் ஒன்றிர்க்கு 50கிலோ தொழு உரத்துடன் 5கிலோ வேப்பம் புண்ணாக்கினை கலந்து 6 மாதத்திற்கு ஒருமுறை இடலாம்.